கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா, G. எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**I.A.No.10/2026 in OS 185/2019**

1.சந்திரசேகர் (இறப்பு)

2. சாந்தி

3. சிவமாறன்

4. அபிராமி .... மனுதார்கள்/பிரதிவாதிகள்

**/எதிர்/**

சேகர் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக 22.04.2026 அன்று வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், தரப்பினர்களின் வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17 மற்றும் 18, பிரிவு 151ன் கீழ், எதிர்வழக்குரையினைச்

சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்</u> :-

அசல் வழக்கை மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் கோரியும், 1ம் மனுதாரின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட 16.07.2018 தேதிய பதிவுக் கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகைப்பரிகாரம் கோரியும் மேலும் குறித்ததை ஆற்றிப்போகும் சட்டம் 1969 பிரிவு 31(2)ன் படி இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணையை மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய பதிவுகளை மேற்கொள்ளும்படிக்கும் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், தற்சமயம் அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சியான வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரரால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையைப் படித்துப் பார்த்தபொழுது எதிர்வழக்குரை பக்கம் 3, பாரா 7 ல், 3 வது வரியிலும் மற்றும் பாரா 8, 2 வது வரியிலும் மற்றும் பக்கம் 4 பாரா 10 ல் முதல் வரியிலும் அதே பாரா 10 ல் 8 வது வரியிலும் 13 வது வரியிலும் விஸ்தீரணம் செண்ட் 94 என குறிப்பிடுவதற்கு பதிலாக தட்டச்சு பிழை காரணமாக 97 என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரம் தற்சமயம் தான் தங்களுக்குத் தெரியவந்தது என்றும், எனவே இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையினை சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், இல்லாவிடில் தங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு நேரிடும் என்றும், மேலும் மேற்படி விதமாக சீர்திருத்தம் செய்வதனால் இந்த எதிர்மனுதாரருக்கு யாதொரு இழப்பும் நேரிடாது என்றும், மேலும் மேற்படி சீர்திருத்தம் இவ்வழக்கில் தன்மையை எவ்விதத்திலும் மாற்றக்கூடியதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதார்களின் மனுவும் காலப்பிற்பாடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதார்களின் எதிர்வழக்குரையினை சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதார்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்றும் கூறியுள்ளது உண்மையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டது. உபய தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **<u>தீர்வு</u>** :-

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரங்கள் கோரியும், 16.07.2018 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் (பதிவு ஆவண எண்.1297/2018) இல்லா நிலையானது என்று விளம்புகை செய்யக்கோரியும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள

நிலையில், எதிர்வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி பிரதிவாதிகள்/மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

8. மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கை மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் கோரியும், 1ம் மனுதாரின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட 16.07.2018 தேதிய பதிவுக் கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகைப்பரிகாரம் கோரியும் மேலும் குறித்ததை ஆற்றிப்போகும் சட்டம் 1969 பிரிவு 31(2)ன் படி இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணையை மேலநீலிதநல்லூர் எதிர்மனுதாரர்/வாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய பதிவுகளை மேற்கொள்ளும்படிக்கும் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், தற்சமயம் அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சியான வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரரால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையைப் படித்துப் பார்த்தபொழுது எதிர்வழக்குரை பக்கம் 3, பாரா 7 ல், 3 வது வரியிலும் மற்றும் பாரா 8, 2 வது வரியிலும் மற்றும் பக்கம் 4 பாரா 10 ல் முதல் வரியிலும் அதே பாரா 10 ல் 8 வது வரியிலும் 13 வது வரியிலும் விஸ்தீரணம் செண்ட் 94 என குறிப்பிடுவதற்கு பதிலாக தட்டச்சு பிழை காரணமாக 97 என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரம் தற்சமயம் தான் தங்களுக்குத் தெரியவந்தது என்றும், எனவே இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையினை சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், இல்லாவிடில் தங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு நேரிடும் என்றும், மேலும் மேற்படி விதமாக சீர்திருத்தம் செய்வதனால் இந்த எதிர்மனுதாரருக்கு யாதொரு இழப்பும் நேரிடாது என்றும், மேலும் மேற்படி சீர்திருத்தம் இவ்வழக்கில் தன்மையை எவ்விதத்திலும் மாற்றக்கூடியதில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

9. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதார்களின் மனுவும் காலப்பிற்பாடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதார்களின் எதிர்வழக்குரையினை சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதார்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்றும் கூறியுள்ளது உண்மையில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

10. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதி சந்திரசேகர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகள்/மனுதாரர்கள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டனர் என்றும், அவ்வாறு கட்சி சேர்க்கப்பட்ட பிறகு 1ம் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை அடாப்ட் செய்து கொள்வதாக 2 முதல் 4 மனுதாரர்கள் குறிப்பாணை தாக்கல் செய்தனர் என்றும், தற்போது வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக மேற்படி எதிர்வழக்குரையைப் படித்துப் பார்த்தபோது, எதிர்வழக்குரை பக்கம் 3 பாரா 7 ல் 3 வது வரியிலும், பாரா 8 ல் 2 வது வரியிலும், பக்கம் 4 பாரா 10 ல் முதல் வரியிலும், அதே பாராவில் 8 வது மற்றும் 13 வது வரிகளிலும், புல எண்.384/1ன் மொத்த விஸ்தீரணம் 94 செண்ட் என்று குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக தட்டச்சுப் பிழை காரணமாக 97 செண்ட் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மனுதாரர்கள் அறிந்தார்கள் என்றும், அதனால் மேற்கண்ட எதிர்வழக்குரையில் உள்ள தவறை சரிசெய்து கொள்ளும் வகைக்கு சீர்திருத்தம் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரர்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு நேரிடும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை அல்ல என்றும், மனுதார்களின் மனு காலப்பிற்பாடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்

ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், இம்மனு மனுதார்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மனுதார்கள்/பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில், மனுவில் கூறியுள்ளவாறு, 7 வது பாராவின் 3 வது வரியிலும், 8 வது பாராவின் 2 வது வரியிலும், 10 வது பாராவின் முதல் வரி, 8 வது வரி மற்றும் 13 வரி ஆகியவற்றில் சர்வே எண்.384/1 ன் மொத்த விஸ்தீரணம் 97 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்கண்ட "97 செண்ட்" என்ற விபரத்தை "94 செண்ட்" என்று சீர்திருத்தம் செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்ட ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், மேற்கண்ட சீர்திருத்தத்தை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை மாறாது என்று கருதியும், மனுதாரர்களுக்கு அவர்களது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பளிக்கக் கருதியும், இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரருக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்று கருதியும், இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**11. முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.06.02 14:46:11 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி ,

சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–** இல்லை.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.06.02 14:46:15 +0300

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சங்கரன்கோவில்.**

கூ.மா.உ.நீ., சங்கரன்கோவில்,

I.A.No.10/2026

in

O.S.No.185/2019

உத்தரவு (Draft / Fair)

நாள் : 02.06.2026